# முடிவுரை

எழுத்து சொல்லிலக்கணக் கோட்பாடுகள் - வரலாற்று நோக்கு என்னும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வேடு தமிழ்மொழியின் மரபிலக்கணத்தை வளத்தை அடிப்படையாகக் கொண்டு காலந்தோறும் அம்மொழியில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைக் காண முயல்கிறது. இவ்வாய்வேடு மூன்று இயல்களாக அமைக்கப்பட்டுள்ளது. முதல் இயல் தமிழ் இலக்கண வரலாற்றைப் பதிவு செய்யும் பொருண்மையிலும், இரண்டாவது இயல் எழுத்திலக்கணக் கோட்பாடுகளையும், மூன்றாவது இயல் சொல்லிலக்கணக் கோட்பாடுகளையும் வரலாற்று நோக்கில் ஆய்ந்து செல்கிறது. இவ்வியல்களில் கண்டுணரப்பட்டுள்ள ஆய்வுமுடிபுகள் இனி நிரல்படுத்தப்பட்டுகின்றன.

தமிழ் இலக்கணத் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் அமைந்துள்ள முதல் இயலின் முடிபுகள் வருமாறு:

தமிழில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இலக்கண உருவாக்கம் நிகழ்ந்துள்ளது.

இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் இன்று மூத்த நூலாக விளங்கிடினும் தொல்காப்பியத்திற்கு முன்னரே பல இலக்கண நூல்கள் தோன்றிப் பெரும் புகழுடன் விளங்கின. அவ்விலக்கண நூல்கள் இருந்தமையைத் தொல்காப்பியர் தம் நூலகத்தே குறிப்பாகச் சுட்டிச் செல்கிறார்.

தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியனவற்றிற்கு எழுந்த உரை விளக்கங்கள் பல்வேறு இலக்கண நூல்கள் அக்காலத்தில் வழங்கியமையை நன்கு உணர்த்துகின்றன.

தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியனவற்றிற்கு எழுந்த உரை விளக்கங்கள் பல்வேறு இலக்கண நூல்கள் அக்காலத்தில் வழங்கியமையை நன்கு உணர்த்துகின்றன.

தொல்காப்பியர் கூறிய இலக்கண வரையறை பல புதிய துறைகளை மீட்டெடுத்தன. யாப்பு, அணி, பாட்டியல், அகராதியியல், அகப்புற பொருளிலக்கணவியல் ஆகிய துறைகள் தொல்காப்பியரை அடியொற்றிப் பிற்காலத்தில் மீட்டெடுத்த துறைகளாகும்.

காலந்தோறும் ஏற்பட்ட கருத்து வளர்ச்சி அல்லது கருத்து முரண் புதிய இலக்கண நூல்களைப் படைக்க அடிப்படையாயிற்று. இவ்வாறு எழுந்த இலக்கண நூல்கள் கூறியது கூறலாம் என்னும் நெறி வழியே

மரபிலக்கணத்தை வரையறை செய்ய வேண்டிய சூழலுக்கு ஆளாயின. ஆயினும் காலச்செலவால் பழைய சிலவற்றைக் கழித்தும் புதியன சிலவற்றைச் சேர்த்தும் இந்நூல்கள் படைக்கப்பட்டமையால் அவை இன்றளவும் வழங்குகின்றன.

சில இலக்கண நூல்கள் தோன்றி ஓரிரு நூற்றாண்டுகளுக்குள்ளாகவே போற்றுவாரின்றி வழக்கொழிந்தன. சில இலக்கண நூல்கள் வடமொழி இலக்கண மரபினை நோக்கித் தமிழ் மொழியிலும் அவ்வரையறைகளைப் புகுத்தப் பார்த்தன.

வீரசோழியம் முதலான அத்தகு இலக்கண நூல்கள் தமிழ் இலக்கண உலகில் ஏற்றம் பெறவில்லை. தொல்காப்பியத்தில் பாவகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பாவினங்கள் குறிப்பிடப்படவில்லை. பிற்காலத்தில் பாவினங்கள் விளக்க மட்டுமே தனித்தனி இலக்கண நூல்கள் எழலாயின. விருத்தம், வண்ணம், சிந்து முதலான யாப்பு வடிவங்களுக்கு மிகவும் பிற்காலத்திலே தான் இலக்கண வரையறை செய்யப்பட்டது. இவ்வடிவங்கள் பெருவாரியாக தமிழில் வழங்கிய போதும் அவற்றிற்கான இலக்கண வரையறையை அவ்வவ் காலத்தில் எழுந்த இலக்கண நூல்கள் ஏனோ கூறாமல் விடுத்தன. இவ்வாறு தமிழ் இலக்கணம் பல்லாயிர ஆண்டு கால வரலாற்றினை உடையதாக இருப்பினும் சில வளர்நிலைகளும் புதிய துறையாக்கங்களும் கூற வேண்டுவனவற்றைக் கூறாமல் விடுத்த கருத்துத் தேக்கங்களும காணப்படவே செய்கின்றன. ஆயினும் தமிழில் தோன்றியுள்ள இலக்கண நூல்களின் தொகைக்கு ஒப்ப பிற மொழிகளில் இலக்கண வளர்ச்சி அமையவில்லை என்னும் கருத்து, தமிழ் மொழியைப் பெருமைப்படுத்தும்.

எழுத்திலக்கணக் கோட்பாடு என்னும் தலைப்பில் அமைந்துள்ள இரண்டாமியலின் முடிபுகள் வருமாறு:

தமிழ் மொழியின் காலப்பழமைக்கு ஏற்ப அம்மொழியின் அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தமிழில் இன்றுவழங்கி வரும் பிற இலக்கணப் பிரிவுகளைப் போன்றே தமிழ் எழுத்திலக்கணமும் காலந்தோறும் சிலபல மாற்றங்களைப் பெற்று வருகிறது. தொல்காப்பியம் தொடங்கி பின்னெழுந்த இலக்கண நூல்களிலும் முதன்மை இலக்கணமாய்த் திகழும் எழுத்திலக்கணம் காலச்செலவின் காரணமாய், வளர்நிலைகளையும் முரண்களையும் ஒருங்கே பெற்றிலங்குகின்றது.

ஒலியை எழுப்புதலாகிய காரியத்தால் உருவாவதே எழுத்தாகும். அவ்வெழுத்தானது மொழி என்னும் பொருண்மையிலும் தமிழில்

வழங்கப்படுகிறது. அவ்வாறு எழுத்தை மொழி எனச் சுட்டுவதற்கு ஓரெழுத்து ஒரு மொழியைச் சான்றாய்க் கொள்ளலாம். ஓரெழுத்து ஒரு மொழியானது தமிழில் இன்றுகாறும் வழக்கில் இருந்து வருகின்றது. ஓரெழுத்து ஒரு மொழி வழங்கப்படா உலகமொழிகளோடு ஒப்பிடுகையில் தமிழின் காலத்தொன்மை புலப்படும்.

எழுத்திலக்கணப் பிரிவுகளை எட்டு வகைகளாகவும் எட்டிறந்த பல வகையினதாகவும் இலக்கண உரையாசிரியர்கள் சுட்டுகின்றனர். உரையாசிரியர்களின் வகைப்பாட்டினைப் பின்பற்றிப் பிற்கால இலக்கண நூலாசிரியர்களும் எழுத்திலக்கணத்தை வகைப்படுத்தி விளக்கத் தொடங்கினர். ஆனால் இவ்வகைப்பாடானது முழுதும் ஏற்புடையன அல்ல. தொல்காப்பியர் சுட்டிக்காட்டிய கருத்துக்களைத் தனியொரு வகைப்பாடாக உரையாசிரியர்கள் கொண்டவற்றைப் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் அப்படியே பின்பற்றாமல் தமக்கு ஏற்புடைய தன்மையிலே வகைப்படுத்திச் செல்கின்றனர். எழுத்திலக்கணத்தின் வளர்நிலையை விளக்கும் நோக்கில் எழுந்த இவ்வகைப்பாடு இலக்கண நூலாசிரியர்களிடையே முரண்களைத் தோற்றுவித்துள்ளன.

தொல்காப்பியர் முப்ப.ஃ.தாகக் கணக்கிட்டு உரைத்த முதலெழுத்தினை வீரசோழியம் ஆய்தத்தையும் உடனிணைத்து முப்பத்தொன்றாக எடுத்துரைத்தது. ஆய்தத்தின் பயன்பாட்டுத் தன்மை, இயங்குநிலை, ஒலிப்புமுறை இவற்றினை நோக்கி ஆய்தமானது முதலெழுத்தாய்க் கொள்ளாது, சார்பெழுத்தாய்க் கொள்வதே சிறப்பு ஆகும்.

உந்துதலாகிய காரணத்தான உந்தி என்று சுட்டப்படும் உதரவிதானப் பகுதியிலிருந்து எழுத்துக்களானவை பிறக்கின்றன. அவ்வெழுத்துகளின் பிறப்புக் கோட்பாட்டில் தொல்காப்பியரின் கருத்துகளையே பிற்கால இலக்கண நூல்கள் பெரிதும் பின்பற்றியுள்ளன. இன்றைய மொழியியலார் கூறும் எழுத்துப் பிறப்புப் பற்றிய கோட்பாட்டினை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியர் விளக்கிக் கூறியுள்ளமையை நோக்க தமிழிலக்கண மரபின் வீச்சினை அறியமுடிகிறது. வீரமாமுனிவர் பிற இலக்கண நூல்களிலிருந்து மாறுபட்டு பிறப்பிலக்கணத்தை முதலில் எடுத்துரைத்த பின்னரே எழுத்தின் பிற கோட்பாடுகளை விளக்கி யுரைக்கின்றார்.

எழுத்துருவக் கோட்பாட்டில் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ் மொழியானது ஒலிநிலைக்கேற்பச் செறிவான வரிவடிவினைப் பெற்றிலங்குகின்றது என்னும் கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. காலந்தோறும் தமிழ் எழுத்து

வடிவம் சிற்சில மாற்றங்களைப் பெற்றிருந்த போதும் இன்று வழங்கும் தமிழ் எழுத்து வடிவ மாற்றத்தை ஏற்படுத்தியவர் வீரமாமுனிவராவார். அவர் எகரமும் ஒகரமும் புள்ளி பெறும் நிலையை மாற்றி, புள்ளியில்லா வடிவம் ஓகாரம் கீழாகச் சுழி பெற்ற வடிவமாகவும் திருத்தியுள்ளமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மொழிமுதல் எழுத்துகளுள் சகரமானது மொழிமுதலில் இயங்கும் நிலையானது தொல்காப்பியரின் கருத்திலிருந்து தோன்றிய வளர்நிலையாகும். சங்கஇலக்கியத்தில் சகரம் மொழிமுதலாகியுள்ளமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எழுத்துகளின் புணர்ச்சி, மயக்கம் இரண்டிற்குமான பாகுபாடு உணர்த்தப் பட்டுள்ளது. மெய்ம்மயக்கத்தில் தோன்றிய முரண்பாடுகள் விளக்கித் தெளிவாக்கப்பட்டுள்ளன. தொல்காப்பிமும் தொல்காப்பியத்தைத் தொடர்ந்து நன்னூலும் தான் புணர்ச்சி பற்றிய கருத்தினைத் தெளிவாகக் கூறுகின்றன. பிற்கால இலக்கண நூல்களில் இக்கருத்து பொதுப் படையுமாகவே காணப்படுகின்றது.

எழுத்திலக்கணத்தின் வகைப்பாட்டிலும் விளக்கமுறைகளிலும் தமிழிலக்கண நூல்கள் தொல்காப்பியத்தையே பெரிதும் பின்பற்றியுள்ளன. சில இடங்களில் மட்டும் நன்னூலை அடியொற்றியுள்ளன.

நன்னூல் தனது முந்து நூலான தொல்காப்பியத்தைத் தழுவியே படைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அந்நூல் தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்துகளையும் ஏற்று உரையாசிரியர்களின் கருத்துகளை இலக்கண விதிகளாகவும் படைத்துள்ளது.

சுட்டு எழுத்துகள் குறித்து இலக்கண நூல்களிடையே முரண் இல்லை. என்றாலும் உகரச் சுட்டின் விளக்கம் இலக்கண நூல்களில் விளக்கப்படவில்லை. அகரமும் உகரமும் சேய்மைச்சுட்டுகளாகும். இவற்றுள் கட்புலனாகும் தூரத்தைச் சுட்ட உகரமும் கட்புலனாகா தூரத்தைச் சுட்ட அகரமும் பயன்பட்டு பின் இரண்டிற்கும் பொதுவாக அகரச் சுட்டினையே வழங்கும் வழக்கு ஏற்பட்டுள்ளது என்னும் ஆய்வு முடிபினை எற்கலாம்.

தொல்காப்பியர் காலத்தில் வினா எழுத்து மொழியீற்றில் நின்று வினாப்பொருளைத் தந்தது. பிற்காலத்தில் தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இல்லாத புதிய வினா எழுத்துகள் வழக்கிற்கு வந்தன. அவை மொழிமுதலாக நின்றும் வினாப்பொருளைத் தந்தன. இந்நிலையே இன்றைய தமிழிலும் வழங்குகிறது.

இலக்கணச் செய்திகளில் எழுத்துகளின் வருகை, பிறப்பு, புணர்ச்சி எனும் நிலைகளில் அனைத்து நூல்களுக்கிடையேயும் கருத்தளவில் ஒப்புமை, வகை, தொகை, விரி அமைப்பு, இயல் வகைப்பாடு, கருத்தை நிறுவும் முறை, வரிவடிவ மாற்றம், வரிவடிவச் சீர்மை வேண்டல், நூலாசிரியர்களுள் சிலர் உரையாசிரியர்களாக உள்ளமை, மரபு, வழக்கு, இலக்கியம் இவற்றினடிப்படையில் தொல்காப்பியத்தையும் நன்னூலையும் தழுவி எழுதப்பட்டுள்ளமை, பல இலக்கண நூல்களிலும் நன்னூலின் தாக்கம் செல்வாக்குப் பெற்றுள்ளமை என்பதால் தொல்காப்பியரே வடசொல் மொழிக் கலப்பை ஏற்றுக்கொண்டார் எனும் கருத்துபட அனைத்து நூல்களும் வடசொல் கலப்பை ஏற்று அவற்றிற்குத் தனியாக விதிகளைக் கூறியுள்ளன. பிறமொழி ஆக்கம், வடமொழி ஆக்கம், ஒலிபெயர்ப்பு, தீர்க்க சந்தி, குணசந்தி, விருத்தி சந்தி என விரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும் இயல் அமைப்புகளில் ஒருங்கிணைந்த தன்மை, எழுத்திலக்கணப் பொருள் வகைப்பாடு, மொழிமுதல், இடை, இறுதி எழுத்துகள், முதல், சார்பெழுத்துகள், மாத்திரை, பிறப்பு இவற்றில் சிற்சில மாறுபாடுகள் பதிவுபெற்றுள்ளன.

சொல்லிலக்கணக் கோட்பாடுகள் என்னும் தலைப்பில் அமைந்துள்ள மூன்றாமியலின் முடிபுகள் வருமாறு:

சொற்களை இரு நான்கு வகையினதாய்த் தொல்காப்பியர் பாகுபடுத்தி விளக்குகிறார். எட்டாகவும் எட்டிறந்த வகையினதாகவும் சொல்லின் பகுப்பு குறித்துத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறிய கருத்துகளைப் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் பின்பற்றியுள்ளனர். முந்தைய இலக்கண நூல்களைக் கற்றுணர்ந்து இலக்கணம் படைப்பதோடு முந்தைய நூலிற்கான உரையாசிரியர்களின் கருத்தினையும் நோக்கியே நூலாக்குகின்றனர் என்னும் கருத்தும் நிறுவப்பட்டுள்ளது.

சொல்லிலக்கணத்தைப் பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைக் கோட்பாட்டின் கீழ் அமைத்து, வளர்நிலை பற்றி ஆராய்ந்துள்ளது இவ்வியல். சொல் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று பகுக்கப்பட்டுள்ளமையைக் கொண்ட தொல்காப்பியர் காலத்தில் மொழிக்கலப்பானது தோற்றம் பெற்றுள்ளது என்னும் கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பெயரானது திணை, பால், இடம் முதலியவற்றின் அடிப்படையில் பகுத்தலோடு, பெயரின் தன்மை, அமைப்பு முதலியனவற்றை நோக்கி வியங்கோள், வினையாலணையும் பெயர் என்று வகைப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

வினைச்சொல்லானது வினை, குறிப்பு வினை என்று இரண்டாய்ப் பகுத்து ஆயப்பட்டுள்ளது. குறிப்பு வினையைப் பெயராய்க் குறிப்பிடும் கருத்து முரண்பாடானதாகும். குறிப்பு வினைக்கும் பெயருக்குமான வேறுபாடு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வினைச் சொல்லின் வகைமை குறித்த கருத்தில் தமிழ் இலக்கண ஆசிரியர்களிடம் ஒருமித்த கருத்தே காணப்படுகிறது. ஆனால் வினையின் ஈறுகளைக் குறிப்பிடுவதில் மட்டும் மாற்றங்கள் காணப்படுகின்றன.

இடைச்சொல்லானது பெயரையும் வினையையும் சார்ந்தியங்கினாலும் அவ்விரு சொற்களுடன் சேர்ந்து அவற்றின் பொருளினையும் மாற்றியமைக்கும் தன்மையுடையதாகும். மேலும் இடைச்சொற்கள் தமக்கென தனிப்பொருள் பெற்றிலங்குகின்றன. இடைச் சொற்களைத் தொல்காப்பிமும் பிற்கால இலக்கண நூல்களும் ஏழ் வகையினதாய்ப் பகுத்துரைக்கின்றன. தொல்காப்பியர் வழிநின்று ஏழாய்க் கொள்வதே சிறப்பாகும்.

மொழியின் அடிச்சொற்களே உரிச்சொற்களாகும். உரிச்சொல்லானது தமிழில் நிகண்டு, அகராதி, சொற்களஞ்சியம், சொல்லடைவு, தொடரடைவு முதலியன தோற்றம் பெறுவதற்கு அடிப்படையாய் அமைந்துள்ளது. அவ்வகையில் அகராதியியல் என்னும் தனியோர் இலக்கண வகையினைத் தமிழில் தோற்றுவித்த பெருமை தொல்காப்பிய உரியியலையே சாரும்.

தொல்காப்பியம் விவரிப்பு முறைப்பகுப்பிலும் வீரசோழியம் தமிழ் - வடமொழி ஒப்பீட்டுப் பார்வையிலும் நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம் என்பன கற்பித்தல் நோக்கில் எழுதப்பட்டது போன்று இக்கால இலக்கண நூல்கள் புதிய செய்திகளைச் சேர்த்தும் விடுத்தும் மாற்றியும் புதுக்கியும் விரித்தும் சுருக்கியும் பேசியுள்ளதுடன் பழைய இலக்கணங்களிலுள்ள செய்திகளை மறுபடைப்பு செய்து ஆக்கப்பட்டுள்ளவையே எனத் துணியலாம்.

தொல்காப்பியம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை பல இலக்கணநூல்கள் தமிழில் தோன்றியுள்ளன. அவை யாவும் தமிழ்மொழியில் நிகழ்ந்த மாற்றங்களை வரையறை செய்து கூறும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டன. தற்காலத் தமிழ்மொழியின் இலக்கண மரபுகளை மேனாட்டவர் உறவால் வந்துள்ள புருவரவான மொழியியல்துறை வல்லுநர்கள் பதிவு செய்து வருகின்றனர். தமிழ் மூவாயிரம் ஆண்டுகளாக உயிர்ப்புடன் விளங்குவதோடு மட்டுமில்லாது தனது மரபுகளில் பெரிய மாற்றங்களைப் பெறாது இன்றளவும் வாழ்வது போற்றுதற்குரிய ஒன்றாகும். தமிழிலக்கண வளத்தை அடிப்படையாகக் கொண்டு பல ஆய்வுகளை

எதிர்காலத்தில் நிகழ்த்தலாம். தமிழ்மொழியின் எழுத்து சொல்லிலக்கண வரையறைகளை உட்படுத்தி,

1. மரபிலக்கணமும் அயலகத் தமிழ்மொழியும் ( சொல்லிலக்கண நோக்கில்)
2. வட்டார மொழிகளும் பழந்தமிழும்
3. எழுத்துச் சீர்திருத்தக் கோட்பாடு

ஆகிய தலைப்புகளில் இனிவரும் ஆய்வாளர்கள் ஆய்வுகளை நிகழ்த்தலாம்.